

தூத்துக்குடி மாவட்டம், புதுக்கோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா முன்னிலையில் நேற்று 28.09.2023 வட்டார அளவிலான ஒருங்கிணைந்த காசநோய் சிகிச்சை மற்றும் பரிசோதனை மையத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். அருகில் இயக்குனர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை மரு.டி.எஸ்.செல்வநாயகம் , மாவட்ட வருவாய் அலுவலர் ச.அஜய்சீனிவாசன் , கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ் ஆகியோர் உள்ளனர்.



செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தையொட்டி ஜி.எஸ்.டி சாலையில் நேற்று (28.9.2023) அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் துறை மூலம் நடைபெற்று வரும் சாலைப் பணிகளை சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வுகளின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி. வரலட்சுமி மதுசூதனன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர.ராகுல்நாத், உதவி ஆட்சியர் (பயிற்சி) ஆனந்த் குமார் சிங், , தாம்பரம் காவல் ஆணையர் (போக்குவரத்து) என்.குமார் , நெடுஞ்சாலைத்துறை மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### வேளாண் அறிவியலாளர்

# எம்.எஸ்.சுவாமிநாதனுக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணை!

சென்னை, செப்.29-

வேளாண் அறிவியலாளர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

பசிப்பிணி ஒழிப்பு உணவுப் பாதுகாப்பு என்ற இரு குறிக்கோள்களுக்காகக் கடந்த முக்கால் நூற்றாண்டு காலம் அரும்பணி ஆற்றி வந்த தலைசிறந்த வேளாண் அறிவியலாளர் எம்.எஸ் சுவாமிநாதன் அவர்கள் மறைந்தார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்துகிறேன் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் மறைவிற்கு இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.

நீடித்து நிலைத்த உணவுப் பாதுகாப்புக்காக ஆற்றிய பங்களிப்புகளுக்காக பசுமைப் புரட்சியின் தந்தை எனப் பரவலாகப் போற்றப்படும் சுவாமிநாதன் அவர்கள் உலக அரிசி ஆராய்ச்சி நிறுவனம் (IRRI), இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் (ICAR) முதலிய பல்வேறு பன்னாட்டு மற்றும் அரசு ஆராய்ச்சி நிறுவனங்களின் உயர் பொறுப்புகளில் பணியாற்றிய சிறப்புக்குரியவர் ஆவார். சமூகத் தலைமைக்கான ராமன் மகசேசே விருது, பத்ம ஸ்ரீ, பத்ம பூசன், பத்ம விபூசன் உள்ளிட்ட பல்வேறு உயரிய விருதுகளை சுவாமிநாதன் அவர்கள் பெற்றுள்ளார்.

உலகம் போற்றும் விஞ்ஞானியாக சுற்றுச்சூழல் வேளாண்மைத் துறையில் அளப்பரிய பங்காற்றிய சுவாமிநாதன் அவர்களை கௌரவிக்கும் விதமாக அன்னாருக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்தப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

### கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தையொட்டி

# போர்க்கால அடிப்படையில் மழைநீர் வடிகால் - சாலைப் பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, செப்.29-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் போர்க்கால அடிப்படையில் கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தையொட்டி, மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, நேற்று செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் புதிய பேருந்து முனையத்தின் இறுதிக்கட்ட பணிகள் மற்றும் சென்னை வெளிவட்ட சாலையை ஒட்டிய ஜி.எஸ்.டி சாலையில் அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் துறை மூலம் நடைபெற்று வரும் சாலைப் பணிகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது :

கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் அமைக்கப்பட்டு வரும் புதிய புறநகர் பேருந்து முனையம் “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்” எனும் பெயரில் மக்கள் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்படும்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தையொட்டி, ஜி.எஸ்.டி சாலையில் அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள் ரூ.17 கோடி மதிப்பீட்டில் வடிகால் அமைகின்ற பணியானது 1.5 கிலோமீட்டர் அளவிற்கு போர்க்கால அடிப்படையில் மூன்று பிரிவாக பிரித்து வடிகால் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த வடிகால் பணியானது அக்டோபர் மாதத்திற்குள் முடிக்கத் திட்டமிட்டு இருக்கிறோம்.

அதேபோல, நெடுஞ்சாலைத்துறை மூலம் ரூ.16.61 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் சாலைப் பணிகளான அயனஞ்சேரி - மீனாட்சிபுரம் சாலை விரிவாக்கம், போலீஸ் அகாடமி சாலை - கூடுவாஞ்சேரி - ஊனமஞ்சேரி சாலை மற்றும் கூடுவாஞ்சேரி-மண்ணிவாக்கம்-ஆதனூர் சாலை ஆகிய பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன.

இப்பேருந்து முனையத்தில் முகப்பு வளைவு அமைக்கும் பணி ரூ.4.75 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கான பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இப்பணி ஓரிரு நாட்களில் தொடங்கப்படும்.

இப்பேருந்து முனையத்தில் காவல் நிலையம் ரூ.14 .80 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கான பணிகள் நடைபெறவுள்ளன. முடிச்சூர் சென்னை வெளிவட்ட சாலையில் ஆம்னி பேருந்து நிறுத்துமிடம் அமைக்கும் பணி ரூ.29 கோடி மதிப்பீட்டில் முழு வீச்சில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி.வரலட்சுமி மதுசூதனன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆ.ர.ராகுல்நாத், உதவி ஆட்சியர் (பயிற்சி) ஆனந்த் குமார் சிங், தாம்பரம் காவல் ஆணையர் (போக்குவரத்து) என்.குமார், நெடுஞ்சாலைத் துறை மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### எஸ்.முரளி தலைமை! மயிலை த.வேலு எம்.எல்.ஏ. முன்னிலையில்

# கலைஞரோடு நான்! கலைஞரோடு அனுபவம்! அவரின் சாதனை நினைவுகூரும் நிகழ்ச்சி!

## அமைச்சர் கே.என்.நேரு - நக்கீரன் கோபால் - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. சிறப்புரை!

சென்னை, செப். 29-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி தி.மு.க சார்பில் கலைஞரோடு நான் கலைஞரோடு அனுபவமும் அவரின் சாதனைகளையும் நினைவு கூரும் நிகழ்ச்சி மயிலை கிழக்கு பகுதிச் செயலாளர் எஸ்.முரளி தலைமையில் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. முன்னிலையில் இன்று (29-9-2023 வெள்ளிக்கிழமை) மாலை 5 மணியளவில் முத்தமிழ் பேரவையில் நடைபெறுகிறது.

கீதா முரளி எம்.சி., எஸ்.முனுசாமி, பி.எல்.தாஸ், ஏ.குமாரி எல்.உதயகுமார் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

நிகழ்ச்சியை துவக்கி வைத்து கே.என்.நேரு (தலைமைக் கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்), நக்கீரன் கோபால், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. சிறப்புரையாற்றுகின்றனர்.

ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., நந்தனம் கி.மதி எம்.சி., (மயிலை மேற்கு பகுதி செயலாளர்) கே.ஏழுமலை எம்.சி., (தியாகராயர் நகர் மேற்கு கழக செயலாளர்) தலைமைக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொள்கிறார்கள்

நன்றியுரை: பா.பொன்னுசாமி துரைபார்த்திபன் மா.பா.அன்பு மயிலை கிழக்கு பகுதியை சார்ந்த மாநில நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

### நெல்லை மாநகர தி.மு.க. தொண்டரணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா –

# கழக பவள விழா மாபெரும் பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு - திண்டுக்கல் ஐ.லியோனி - டி.பி.எம்.மைதீன்கான் சிறப்புரை!

நெல்லை,செப். 29 -

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க நெல்லை மாநகர தி.மு.க. தொண்டரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் கழக பவள விழா மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (30.09.2023 - சனிக்கிழமை) மாலை 6 மணி அளவில் மேலப்பாளையம் பஜார் திடலில் நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம், மேலப்பாளையம் பகுதி துணை செயலாளர் ஆமினாபீவி, மாவட்ட மாணவர் அணி துணை செயலாளர் ரம்ஜான் அலி, மாநகர தொழிலாளர் அணி சாகுல்ஹமீது, தொ.மு.ச. சைபுதீன், வட்டச் செயலாளர் காஜாமுகைதீன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது. மாநகர தொண்டரணி அமைப்பாளர் சித்திக், தொண்டரணி துணை அமைப்பாளர் ரகுமான்ஷா ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

நிகழ்ச்சியை கழக வழக்கறிஞர் முகம்மது நயினார்,மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அலிஃப்மீரான், வழக்கறிஞர் முத்துக்குமார் ஆகியோர் தொகுத்து வழங்குகின்றனர்.

இந்நிகழ்வில் நிதி மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு,மாநில கொள்கை பரப்பு செயலாளர், தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

நிகழ்வில் மாநில மகளிர் அணி செயலாளர் பாளை தொகுதி பார்வையாளர் ஹெலன் டேவிட்சன், மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் நெல்லை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார், நெல்லை நாடாளு மன்ற உறுப்பினர் ஞானதிரவியம்,பாளை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வஹாப்,தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீதாராமன், மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலைராஜா, மாநகராட்சி மேயர் சரவணன், துணை மேயர் ராஜ், மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் பெருமாள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் லெட்சுமணன், பேச்சிப்பாண்டியன், பகுதி கழக செயலாளர்கள் துபாய் சாகுல் (மேலப்பாளையம்) சுப்பிரமணியன்(தச்சை) நமச்சிவாயம் (நெல்லை) அன்டன் செல்லதுரை (பாளை) ஒன்றிய செயலாளர்கள் அருள் மணி,மாரியப்பன், அன்பழகன், பேரூர் செயலாளர் பேச்சிகுட்டி மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள்,மாநகர கழக நிர்வாகிகள், மேலப்பாளையம்,பாளை, பகுதி கழக நிர்வாகிகள், மண்டல தலைவர்கள், கழகப் பேச்சாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாநகர பிரதிநிதிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், மேலப்பாளையம்,நெல்லை பேட்டை, தச்சை, பாளை, வட்ட கழக செயலாளர்கள் மேலப்பாளையம் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் மேலப்பாளையம் இளைஞரணி தர்வேஸ் அப்துல் காதர், விளையாட்டு மேம்பாட்டு அணி சிவராம் முத்துராமன் ஆகியோர் நன்றியுரையாற்றுகின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை நெல்லை மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம், மாநகர தொண்டரணி அமைப்பாளர், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் சித்திக் ஆகியோர் செய்துள்ளனர்.



ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி சார்பில் திராவிட மாடல் பயிற்சி பாசறை கூட்டம் மற்றும் தி.மு.க. இளைஞர் அணி புதிய உறுப்பினர் அட்டை வழங்கும் நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ திராவிட இயக்க பேச்சாளர் வழக்கறிஞர் மதிவதனி பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பா.பிரகாஷ் துணை அமைப்பாளர்கள் என்.மோகன் வேல் கே.குட்டி ஆ.இம்ரான் ஆருண் ,வி.தினேஷ்குமார் பி.பாலச்சந்தர் மற்றும் மாவட்ட பகுதி நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர் இளைஞர் அணி தோழர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


கலைஞர் 100 1924 - 2023



முன்னாள் மேயர் சிவராஜ் அவர்களின் 132ஆவது பிறந்த நாள்

தமிழ்நாடு அரசின் சார்பில்

முன்னாள் மேயர் சிவராஜ் அவர்களின் திருவுருவச் சிலைக்கு

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

நாள்: 29.9.2023 வெள்ளிக்கிழமை | நேரம்: காலை 9.30 மணி | இடம்: தங்கசாலை மணிக்கூண்டு அருகில், சென்னை

இயக்குநர்,
செய்தி – மக்கள் தொடர்புத் துறை,
சென்னை–600 009

செ.ம.தொ.இ / 1107 / வரைகலை / 2023

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in